IRDUC

Information and Resource Centre for the Deprived Urban Communities

Housing and Land Rights Network



# வலுக்கட்டாயமான வெளியேற்றம் மற்றும் இடமாற்றச் செயல்களை எதிர்கொள்ளுவது எப்படி?

– தமிழகத்திலுள்ள நகர வாழ் எளிய மக்களுக்கான தகவல் கையேடு


Metro Railway

# முன்னுரை

உலகமெங்கும் வாழும் எளிய மக்கள் “வளர்ச்சி” திட்டங்கள் மற்றும் உயர்தர கட்டமைப்பு பணிகளுக்காக காலம் காலமாக வசிக்குமிடங்களிலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர்.

நகரங்களை அழகுபடுத்தவும், பன்னாட்டு நிறுவனங்களுக்கு அலுவலகங்கள் அமைக்கவும், தொழிற்சாலைகள் நிறுவவும், நிலச்சொத்து வியாபாரங்களை ஊக்குவிக்கவும், அடிப்படை சேவைகளை தனியார்மயமாக்கவும, இயற்கை வளங்களை சூறையாடவும், வனக்கட்டுப்பாடு மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு எனும் போர்வையில் பாரம்பரியமாக இடம் மற்றும் இயற்கை வளங்களை சார்ந்து தொழில் செய்யும் எளிய மக்களை வலுக்கட்டாயமாக இடமாற்றம் செய்யும் நிலை அதிகரித்துள்ளது.

இவ்வாறு இடம்பெயர்தலுக்கு உட்படுத்தப்படும் மக்கள் தங்கள் உறைவிடத்தையும், உடமைகளையும், தொழில் உபகரணங்களையும் பாரம்பரிய மற்றும் இடம் சார்ந்த தொழிலை இழக்கும் அவல நிலைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். வசிக்கும் இடம் மற்றும் வளங்களை மட்டும் நம்பி பிழைத்த மக்கள் இடமாற்றத்தால் வேலைவாய்ப்பின்றி வறுமையில் வாடி, மாண்பை இழந்த சூழலில் விளிம்பு நிலைக்கு தள்ளப்படுகின்றனர். பலமுறை உரிமையேதுமின்றி மாற்றிடங்களுக்கு கூட வழியில்லாமல் சாலையோரம் வசிக்கும் நிலை உருவாகின்றது.

இத்தகைய நிலை அதிகரித்துக்கொண்டிருப்பதால் “வலுக்கட்டாயமான வெளியேற்றம் மற்றும் இடமாற்றத்தை (Eviction) குறித்த அடிப்படை கொள்கைகள் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்புகளை மக்களுக்கும், சமூக ஆர்வலர்களுக்கும், மனித உரிமையை நிலைநாட்டும் இயக்கங்களுக்கும் எடுத்துச்செல்ல இவ்விழிப்புணர்வு கையேடு, “நகரத்தில் புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்திற்கான வளங்கள் மற்றும் தகவல் சேகரிப்பு மையம்” மற்றும் “உறைவிடம் மற்றும் நிலவுரிமைக்கான கூட்டுப்பணி” என்னும் அமைப்புகளால் கோர்க்கப்படுகிறது.



# உறைவிட உரிமை என்றால் என்ன ?

உலகம் வளர்ச்சியின் பாதையில் வெகு விரைவாக சென்றாலும், உலக மக்கள் தொகையில் சுமார் பாதி மக்கள் தரமான மற்றும் போதிய வசதிகளுடன் கூடிய உறைவிடமின்றி வசிக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அகில உலக மனித உரிமைகள் சட்டம் மற்றும் விளக்கங்களின்படி:

- போதுமான மற்றும் தரமான உறைவிடம் பிரிக்க இயலாத மனித உரிமையாகும்.
- உறைவிடம் என்பது சுவர்களோடும், கூரைகளோடும் கூடிய கட்டுமானம் மட்டுமல்ல, தனி மனிதன் தன் குடும்பத்தினருடன் பாதுகாப்போடு வாழ்வதற்கு தேவைப்படும் தரமான மற்றும் போதிய வசதிகளுடன், சமூக மற்றும் பொது கட்டமைப்புகளுடன் கூடிய பாதுக்காப்பான இருப்பிடத்தையும் உள்ளடக்கும்.

இதைத்தான் உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம் - 1948 (Universal Declaration of Human Rights) பிரிவு 25-ல் உறுதி செய்துள்ளது:

"ஒவ்வொருவரும் உணவு, வீடு, உடை, மருத்துவ உதவி, சமூக பாதுகாப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கூடிய உரிமையுடையவர்கள். வேலையின்மை, நோய், ஆதரவற்றநிலை, முதுமை மற்றும் வாழ்வாதார இழப்பால் பாதிப்படைவோர்க்கு போதிய சமூக பாதுகாப்பு பெற உரிமையுண்டு."

உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தின் அடிப்படையில் 1966-ல் உருவான "பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை" (International Covenant on Economic, Social and Cultural Rights – ICESR) உறைவிட உரிமையை மனித உரிமையாய் நிலைநாட்டுகிறது. இவ்வுடன்படிக்கையின் 11-ஆம் பிரிவின் படி:

"ஒவ்வொருவருக்கும் தன் குடும்பத்துடன் தரமான வாழ்க்கை வாழவும்; போதிய உணவு, உடை, உறைவிடத்தை பெறவும்; வாழ்க்கை சூழலை வளர்த்துக்கொள்ளவும் உரிமையுண்டு என இவ்வுடன்படிக்கையின் உறுப்பினர் நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளது." இந்தியா இவ்வுடன்படிக்கையின் ஒரு உறுப்பினர் நாடு!

ஐக்கிய நாட்டின் உறைவிடத்திற்கான சிறப்பு கண்காணிப்பு அதிகாரியின் (UN Special Raporteur for Adequate Housing) உறைவிட உரிமைக்கான விளக்கம்:

"ஒவ்வொரு பெண், ஆண், இளைஞர் மற்றும் குழந்தைகள் பயமின்றி, பாதுகாப்புடனும், தன் சமூகத்துடனும் இணைந்து, அமைதியுடனும் மாண்புடனும் வாழும் குடியிருப்பே தரமான மற்றும் போதிய உறைவிடத்திற்கான உரிமையாகும்."



# வலுக்கட்டாயமான வெளியேற்றம் என்றால் என்ன ?

ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான செயற்குழு (Committee on Economic, Social and Cultural Rights) வலுக்கட்டாயமான வெளியேற்றத்திற்கான பொருள் விளக்கம்:

- "நிரந்திர அடிப்படையிலோ, தற்காலிகமாகவோ ஒரு தனி நபர், குடும்பம் அல்லது சமூகத்தை அவர்கள் விருப்பமின்றி, அவர்கள் வாழும் உறைவிடம் அல்லது நிலத்தில் இருந்து போதிய சட்டப்பாதுகாப்பின்றி வெளியேற்றுவது"

வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த ஐ. நா. வின் கொள்கை விளக்கத்தின் (UN Basic Principles and Guidelines on Development-Based Evictions and Displacement - 2007) படி:

"ஒரு தனிநபரையோ, குழுவையோ, சமூகத்தினரையோ தங்கள் விருப்பமின்றி கட்டாயப்படுத்தி, எந்த ஒரு சட்ட மற்றும் சமூக ரீதியான பாதுகாப்பின்றி, அவர்கள் பிழைப்பிற்கு ஆதாரமான வீடுகள், நிலங்கள் மற்றும் பொது கூட்டு வளங்களிலிருந்து அவர்களை பிரித்தெடுத்து, அவர்களுடைய வழக்கமான வாழ்க்கையை தகர்த்தெறியும் செயலே வலுக்கட்டாயமான வெளியேற்றம்."

# வலுக்கட்டாயமான வெளியேற்றம் மனித உரிமை மீறலா?

கட்டாய வெளியேற்றத்தால் போதுமான உணவு, நீர், மருத்துவ உதவி, கல்வி, வேலை, தனிமனித பாதுகாப்பு, வன்கொடுமையிலிருந்து சுதந்திரம், நிலம் மற்றும் உறைவிட உரிமை மறுக்கப்படுகிறது. இதில் மிகவும் பாதிப்புக்கு உட்படுத்தப்படுபவர்களில் பெண்கள், சிறுவர்கள், மாற்றுத் திறனாளிகள், முதியோர், தனித்துவாழும் பெண்கள், ஆதரவற்றோர், ஒடுக்கப்பட்ட சமுகத்தினர் மற்றும் சிறுபான்மையோர் ஆவர்.

நினைவில் கொள்ள வேண்டியவை:

- கட்டாய வெளியேற்றம் சர்வதேச மனித உரிமைகளை மீறுவதாகும்.



- கட்டாய வெளியேற்றம் உறைவிட உரிமையை மீறுவதாகும்.
- சர்வதேச சட்டங்களின் படி கட்டாய வெளியேற்றத்திலிருந்து பாதுகாக்க அரசுக்கு கடமை உண்டு.

வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த ஐ. நா. வின் கொள்கை விளக்கம் 2007ல் கொடுக்கப்பட்ட பாதுகாப்புகள்

- போதுமான உறைவிட வசதி மற்றும் நிலத்திற்கு சுவாதீன உடன்படிக்கை போன்ற அடிப்படை உரிமைகளை, இனம், நிறம், பால், மொழி, சாதி, பிறப்பு என்று பாகுபடுத்தாமல் வழங்க அரசுக்கு கடமை உண்டு.
- கட்டாய வெளியேற்றம் தவிர்க்கயியலா சூழலில் மட்டுமே நடத்தப்படுகிறது என்பதற்கான உத்தரவாதத்தை அரசு அளிக்க வேண்டும்.

# வலுக்கட்டாயமான வெளியேற்றத்திற்கு எதிரான சர்வதேச சட்டங்கள்

போதுமான உறைவிடத்திற்கான உரிமைகளை வலியுறுத்தும் சர்வதேச சட்டங்கள்:

- பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கை (பிரிவு 11.1)
- குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை (பிரிவு 27.3)
- பெண்கள் மீதான அனைத்து வகை பாகுபாட்டிற்கு எதிரான உடன்படிக்கை (பிரிவு 14.2)
- இனப் பாகுபாட்டிற்கு எதிரான உடன்படிக்கை (பிரிவு 5)

அதுமட்டுமல்லாமல், ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான செயற்குழுவின் உறைவிட உரிமையின் கீழே குறிப்பிட்டுள்ள உட்கூறுகளையும் உறுப்பினர் நாடுகள் பின்பற்ற வேண்டும்.

- சட்டபூர்வமான நிலத்திற்கான பாதுகாப்பு (அங்கீகரிக்கப்பட்ட இருப்பிடம்)
- அடிப்படை சேவைகள் எளிதில் கிடைத்தல்
- எளிய மக்களும் வாங்கும் வகையில் மானியத்துடன் வீடுகள்
- அனைவருக்கும் (முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கும்) உகந்த குடியிருப்பு
- வசிக்கும் தன்மையுடன் அமைத்தல்
- வளங்கள் மற்றும் இடம் சார்ந்த தொழில் அருகாமையில்
- பாரம்பரிய கலாசாரத்திற்கு தகுந்த வீடுகள்

ஐக்கிய நாட்டின் உறைவிடத்திற்கான சிறப்பு கண்காணிப்பு அதிகாரியால் கொடுக்கப்பட்ட உட்கூறுகளாவன: பாதுகாப்பான உறைவிடம், பங்கேற்பு மற்றும் தகவல் பெறுதல், நிலம், நீர் மற்றும் இயற்கை வளங்களை அனுபவித்தல், அப்புறப்படுத்துதல், சேதப்படுத்துதல் மற்றும் அழிவிலிருந்து சுதந்திரம், மறுகுடி அமர்வு மற்றும் இழப்பீடு, நியாயமான தீர்வுக்கான வாய்ப்பு, கல்வி மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையிலிருந்து சுதந்திரமும் உள்ளடங்கும்.


வாழ்வாதாரம்
இந்திய
அரசியல் சாசன
சட்டம்
பிரிவு 21

# வலுக்கட்டாயமான வெளியேற்றத்திற்கு எதிரான தேசிய சட்டங்கள்

1. இந்திய அரசியல் சாசனம்

இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு 21 வாழ்வுரிமையை பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன் அடிப்படையில் உச்ச நீதிமன்றம் உறைவிடத்திற்கான உரிமையை அடிப்படை உரிமையாக அறிவித்துள்ளது.

இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளை ஆழமாக சிந்தித்தால் உறைவிட உரிமைகளை உள்ளடக்கும் என்பதை உணரலாம்:

- இந்தியா முழுவதும் நடமாடும் உரிமை (பிரிவு 19 1 D)
- இந்தியாவில் எவ்விடத்திலும் குடியிருப்பு அமைக்க சுதந்திரம் (பிரிவு 19 1 E)
- விரும்பிய தொழிலை செய்ய உரிமை (பிரிவு 19 1 G)
- சட்டத்தின் முன் அனைவரும் சமம் (பிரிவு 14)
- மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறப்பிடத்தின் அடிபப்டையில் பாகுபாடின்மை (பிரிவு 15 1)
- உயிர் வாழ்தல் மற்றும் தனிநபர் சுதந்திரத்திற்கான உரிமை (பிரிவு 21)
- பெண்கள், குழந்தைகளுக்கு நேர்மறை பாகுபாட்டின் அடிப்படையில் சிறப்புச் சலுகை (பிரிவு 15 3)

2. இந்திய அரசியல் சட்டங்களாவன

பழங்குடியினர்/ஆதிதிராவிடர் (SC/ST) வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 அத்தியாயம் 2 (3) (15)-ன் கீழ் உள்ள பாதுகாப்பு:

"வலுக்கட்டாயமாக SC/ST இனத்தைச் சார்ந்த மக்களை தாங்கள் வசிக்கும் இடத்திலிருந்தோ, உறைவிடத்திலிருந்தோ, வாழும் கிராமங்களிலிருந்தோ அகற்றுவது சட்டவிரோதமான செயல்"

3. இந்திய அரசியல் கொள்கைகள்

தேசிய உறைவிடம் மற்றும் வாழ்விடத்திற்கான கொள்கை (National Urban Housing and Habitat Policy) 2007-ன் படி:



- அரசு எல்லா மக்களுக்கும், போதிய மற்றும் தரமான உறைவிடம் வழங்கவேண்டும். இதில் தலித், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் நகர வாழ் ஏழை மக்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.
- நியாயமான மற்றும் சமமான நில, உறைவிடம் மற்றும் அடிப்படை கட்டமைப்புகளை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.
- வேலை சார்ந்த இடங்களின் அருகாமையிலேயோ, வசிக்கும் இடங்களை மேம்படுத்தியோ வீடுகள் வழங்க வேண்டும்.
- பெண்களின் பங்கேற்பு எல்லா நிலை திட்டமிடுதலிலும் முடிவெடுக்கும் செயல்பாடுகளிலும் இருத்தல் வேண்டும்.


தேசிய மறுகுடியேற்றம் மற்றும் புனர் வாழ்வுக் கொள்கை (National Resettlement and Rehabilitation Policy) 2007-ன் படி:

- கூடுமான அளவில் அதே இடங்களில் வீடுகள் கட்டி தரப்பட வேண்டும். மாற்றிடம் மற்றும் வேறு இடங்களில் குடி அமர்த்துவது தவிர்க்கப்படவேண்டும்.
- மக்கள் பங்கேற்புடன் வெளி நபர்கள் தலையீடுகளை தவிர்த்து கலந்தாய்வுகள் மூலம் செயல்முறைபடுத்தப்பட வேண்டும்.
- சமூக தாக்க அறிக்கை (Social Impact Assessment) தயாரித்து மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- எந்த கணக்கெடுப்பு பணி நடைபெறுவதற்கு முன்பும் வீடுகள் எங்கே மாற்றி அமைத்து தரப்படும் என்ற தெளிவான விவரங்களை மக்களிடம் அறிவிக்க வேண்டும்.
- திட்ட அறிக்கைகளை குறைந்த பட்சம் நான்கு தினசரி பத்திரிக்கைகளில் வழக்கு மொழிகளில் வெளியிட வேண்டும். மற்றும் மண்டல, மாநகராட்சி அலுவலகம், வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களிலும், பாதிக்கபடவிருக்கும் பகுதிகளிலும் தெளிவாக அறிவிக்க வேண்டும்.
- பாதிப்புக்கு உள்ளாகும பகுதிகளில் மக்களை அழைத்து அவர்களிடம் அவர்கள் வாழும், வாழவிருக்கும் பகுதிகளைப் பற்றிய மக்கள் பொது விசாரணையோ, கலந்தாய்வோ, செய்திருக்க வேண்டும் இதனடிப்படையில் திட்டங்கள் முடிவு செய்ய வேண்டும்.

### 4. உச்சநீதிமன்ற தீர்ப்புகள்

இதுமட்டுமல்லாமல் பல உச்சநீதிமன்ற தீர்ப்புகளும் உறைவிட உரிமைகளை நிலைநாட்டுகின்றது இதில் சில:

- பிரான்சிஸ் கொராலி தில்லி அரசுக்கு (Francis Coralie Vs. Union Territory of Delhi, case number: AIR SC 746 753) எதிராகத் தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு (1981): "வாழ்வுரிமை மாண்புடன் வாழும் உரிமையையும் உள்ளடக்கும். வாழ்க்கைக்கு இன்றியமையாத அடிப்படை வசதிகளாகிய போதிய உணவு, உடை, உறைவிடம், கருத்துக்களை பறிமாறும் பல யுக்திகளை பயன்படுத்துவதும், பிற மனிதர்களுடன் இணைந்து வாழ்வதும் வாழ்வுரிமையே."
- சமேலி சிங் உத்திர பிரதேச மாநிலத்திற்கு (Chameli Singh and Others Vs. State of Uttar Pradesh case number: AIR 2 SCC 549 132) எதிரான வழக்கின் தீர்ப்பு 1996:


• தமிழ்நாடு குடிசை
பகுதிகள் (மேம்பாடு
மற்றும் அகற்றல்)
சட்டம் 1971
• குடிசை பகுதிகள் சட்டம்
• நகராட்சி- அரசு ஆணைகள்

“எந்த ஒரு நாகரீகமான சமுதாயத்திலும் உணவு, குடிநீர், சுற்றுப்புற சூழல், கல்வி, மருத்துவ வசதி மற்றும் உறைவிடம் வாழ்வுரிமையில் முக்கிய பங்கு வகிக்கிறது”

- ஆல்கா டெல்லிஸ் பம்பாய் மாநகராட்சிக்கு (Olga Tellis Vs. Bombay Municipal Corporation, 1985) எதிராக தொடர்ந்த வழக்கின் தீர்ப்பு: “இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு 21 வாழ்வாதார உரிமையையும் உள்ளடக்கும், ஏனெனில் வாழ்வாதாரமின்றி மனிதன் வாழ இயலாது.”

# வலுக்கட்டாயமான வெளியேற்றத்திற்கு எதிரான மாநில (தமிழகம்) சட்டங்கள்

நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் கீழ் (Commissionerate of Municipal Administration) நிலம் தொடர்பாக அரசால் வெளியிடப்பட்ட ஆணைகளின் தொகுப்பில் காணப்படும் சில தகவல்கள்: அரசாங்கத்தால் வளர்ச்சி பணிக்கென நில கையகப்படுத்துதலை தடைசெய்யும் சில அரசு ஆணைகள்:

- தலித் மற்றும் பழங்குடியினரின் நிலங்களை கையகப்படுத்தக்கூடாது என வருவாய் துறையின் அரசு ஆணை எண் 2078 (நாள்: 27.12.1984) மற்றும் அரசு ஆணை எண் 363 (நாள்: 28.4.1995) குறிப்பிடுகிறது.
- வருவாய் துறையின் அரசு ஆணை எண் 1630 (நாள்: 26.9.1994), அரசு ஆணை எண் 814 (நாள்: 3.9.1993) மற்றும் அரசு ஆணை எண் 363 (நாள்: 28.4.1995) கோயில் நிலங்கள் கையகப்படுத்துதலை தவிர்க்க வேண்டும் என வலியுறுத்துகிறது.
- வருவாய் துறையின் அரசு ஆணை எண் 1339 (நாள்: 13.11.1991) சிறு விவசாயிகளின் (2 ஏக்கர் கீழ்) நிலங்கள் கையகப்படுத்தக்கூடாது என வலியுறுத்துகிறது.

தமிழ் நாடு குடிசை பகுதிகள் (மேம்பாடு மற்றும் அகற்றுதல்) சட்டம், 1971, -ன் பிரிவு 11 (1) படி: தமிழ் நாடு குடிசை பகுதி வாரியம் பிரிவு 3ன் எல்லா குடிசை பகுதிகளும் அறிவிக்கப்பட வேண்டும். பிரிவு 11-ன் படி குடிசைபகுதிகளை தமிழ் நாடு குடிசை பகுதிகள் சட்டத்தின் கீழ் அங்கிகரிக்கப்படவேண்டும். அறிவிக்க மற்றும் அங்கீகரிக்க தவறிய குடிசைகளை அகற்ற தமிழ் நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு உரிமை இல்லை.




# வலுக்கட்டாயமான வெளியேற்றத்திற்கான நிலை அமைந்தால் அரசு பின்பற்ற வேண்டிய சர்வதேச வழிகாட்டுதல் மற்றும் தரநிலை

வளர்ச்சித் திட்டங்களின் விளைவாக நிகழும் கட்டாய வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்வு குறித்த ஐ. நா. வின் கொள்கை விளக்கத்திலுள்ள பொது கட்டுப்பாடுகள்

- சர்வதேச சட்டங்களின்படி, கட்டாய வெளியேற்றத்திலிருந்து மக்களை பாதுகாக்க அரசுக்கு கடமையுண்டு. இடப்பெயர்தலை குறைக்கும் வகையில் அரசின் திட்டங்கள் அமைய வேண்டும்.
- வெளியேற்றத்தை தவிர்க்க மாற்று திட்டங்களை அரசு மேற்காண முயல வேண்டும்.
- கட்டாய வெளியேற்றம் தவிர்க்கயியலா சூழலில் மட்டுமே நடத்தப்படுகிறது என்பதற்கான உத்திரவாதத்தை அரசு அளிக்க வேண்டும்.
- சர்வதேச மனித உரிமைத் தரம் மற்றும் ஐ. நா. வின் வழிகாட்டுதலின் அடிப்படையில்தான் நடக்கிறது என உறுதியளிக்க வேண்டும்.
- வெளியேற்றப்படுபவர்களுக்கு மறுவாழ்வும் வழங்கபடும் என்று அரசு மக்களுக்கு உத்தரவாதமளிக்க வேண்டும்.

அரசு வெளியேற்றத்திற்கு முன் செய்ய வேண்டிய கடமைகள்:

- அரசு வெளியேற்றத்தை தவிர்க்க மறு மாற்று திட்டத்தினை காண ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.
- வெளியேற்றத்தால் பாதிக்கபட இருப்போர்க்கு முன்கூட்டியே முறையான அறிவிப்பு தரப்படவேண்டும். இத்தகவல்களை உரிய அதிகாரி மக்கள் பேசும் வழக்கு மொழியில் தெரிவிக்க வேண்டும்.
- மக்களுக்கு கொடுக்க வேண்டிய தகவல்கள்: வெளியேற்றத்திற்கான நோக்கம் மற்றும் நில ஆவணங்கள், மறு குடியேற்ற திட்டங்கள் மற்றும் நலிந்த பிரிவினரைப் பாதுகாப்பதற்கான திட்டங்கள்.
- வெளியேற்றம் மற்றும் மாற்று ஏற்பாடுகள் பற்றிய பொது விசாரணை ஒன்று நடத்திடவேண்டும்
- பொதுமக்கள் இத்திட்டத்தின் சாதகங்களையும் பாதகங்களையும் ஆய்வு செய்யவும், மாற்று தெரிவிக்கவும், மறுப்புகளை கூறவும் வாய்ப்பு அளிக்க வேண்டும்.
- பாதிக்கப்படவிருக்கும் மக்களுக்கு சட்டம் குறித்த தேவையான ஆலோசனைகள் மற்றும் அவர்களுடைய உரிமைகள் தெரிவிக்கப்பட வேண்டும்.



மனித உரிமைக் குழுக்கள்
குடிசைப் பகுதி அமைப்புக்கள் (நல வாழ்வு)
நகர வாழ் மக்கள் இயக்கங்கள்
பெண்கள் இயக்கங்கள்

வெளியேற்றத்தின்போது அரசின் கடமைகள்:

- மனித உரிமைகளை காக்கும் வகையில் அரசின் அதிகாரிகள் மற்றும் நடுநிலை அதிகாரிகளும் வெளியேற்ற நடவடிக்கையின்போது கட்டாயமாக இருக்க வேண்டும்.
- வெளியேற்றப்பட்டவர்களின் சொத்துகளை அல்லது கட்டிடங்களை எந்தக் காரணம் கொண்டும் அதிகாரிகள் அழித்துவிட கூடாது.
- மோசமான காலநிலை, திருவிழாக் காலங்கள், மத விழாக்கள் தொடர்பான விடுமுறை நாட்கள், தேர்தலுக்கு முந்திய நாள் மற்றும் பள்ளி தேர்வு நாட்களில் நடத்தக் கூடாது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும்.
- அரசு வன்முறைகள் நடைபெறாது என உத்திரவாதமளிக்க வேண்டும்.
- வீடுகள் கட்டுதல், நீர்வசதி, மின்சாரம், சுகாதாரம், பள்ளிகள், சாலை வசதி, ஒதுக்கீடு போன்ற மாற்று குடியிருப்புக்கான வசதிகள் அனைத்தும் சர்வ தேச மனித உரிமை கொள்கையின் அடிப்படையில் ஏற்கனவே வாழ்ந்த உறைவிடத்தை விட்டு வெளியேறும் முன்பே செய்து தரப்பட்டிருக்க வேண்டும்.
- வெளியேற்றிய மக்களை ஒதுக்கப்பட்ட எளிய மக்கள் மட்டும் வசிக்கும் இடம் (Ghetto) என முத்திரையிடப்படும் வகையான குடியுருப்புகளில் குடியமர்த்தக்கூடாது.

# வலுக்கட்டாயமான வெளியேற்றத்திற்கான நிலை அமைந்தால் அரசு பாதிப்படைந்த மக்களுக்கு கொடுக்க வேண்டிய பாதுகாப்புகள் மற்றும் பரிகாரங்கள்

நிவாரணம்:

கட்டாய வெளியேற்றத்தினால் அச்சுறுத்தப்பட்டு பாதிப்படைவோர் அனைவரும் உரிய நிவாரணம் பெற தகுதியுடையவர்கள். இவர்களின் குறையை கேட்கவும், சட்ட ரீதியான நிவாரணம் பெறவும், சட்ட உதவி பெறவும், மீட்பு, மறு குடியிருப்பு, மறுவாழ்வு, இழப்பீடு பெறவும் உரிமை உண்டு. மறுகுடியமர்வின் போது பெண்கள், குழந்தைகள், தலித் மற்றும் பழங்குடியினரின் மனித உரிமையை சமமாக பாதுகாக்க அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

இவர்களுக்கு உடனடியாக கொடுக்கபட வேண்டியவை:

- உணவு, பாதுகாப்பான குடிதண்ணீர், சுகாதார வசதி
- வீடு
- பொருத்தமான உடை
- மருத்துவ வசதி
- வாழ்வாதாரம்
- குழந்தைகளுக்கான கல்வி
- ஏற்கனவே வருமானம் கொடுத்த பொது சொத்தினை பயன்படுத்துதல்


அண்ணே....
பத்திரிக்கை

மக்கள் மறுகுடியேறும் உறைவிடம் குறித்த கோட்பாடுகள்:


- சட்டபூர்வமான நிலத்திற்கான பாதுகாப்புடன் (அங்கீகரிக்கப்பட்ட இருப்பிடம்) கூடிய குடியிருப்பு.
- அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகள்: தண்ணீர், சமையலுக்கான எரிப்பொருள், சுகாதாரம், உணவு பாதுகாப்பு, சலவை செய்ய வசதி, குப்பைகள் அகற்றுதல், கழிவு நீர் கால்வாய் மற்றும் அவசரகால சேவைகள்.
- வாழ்வதற்கு உகந்த வீடுகள்: காற்றோட்டமான, வீட்டை சுற்றி போதிய இடவசதி, குளிர், காற்று மற்றும் மழைக்கு தகுந்த வீடுகள்.
- வேலை வாய்ப்பு, பள்ளிகள், மருத்துவ சேவை மற்றும் குழந்தைகள் மையங்களுக்கு அருகாமையில் அமைதல்.
- கலாசச்ாரத்துக்கு உகந்த வீடுகள்.

இழப்பீடு:

- பொருளாதார ரீதியான அனைத்து இழப்புகளுக்கும் தகுந்த நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும். இடமாற்றத்தால் ஏற்படும் உடல் அல்லது உள்ள அளவிலான சேதம், கல்வி சமூக பயன்கள் இழப்புகள், பொருள் சார்ந்த இழப்புகள், பொருள் ஈட்டும் திறனழிவு, மருத்துவ செலவு மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்றவற்றிற்க்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.
- ஒருவரின் நிலம் பறிக்கப்பட்டால் அதே அளவு, தரம், மதிப்புடைய நிலமே மற்றாக அமைய வேண்டும். பணமாக கொடுக்கும் இழப்பீடு, நிலம் மற்றும் பொது சொத்துக்கு மாறாக இருத்தல் கூடாது.
- நில சாசனம் பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும் பாதிக்கப்பட்டிருந்தால் இழப்பீடு வழங்க வேண்டும்.
- ஆண், பெண் எனும் இருபாலரும் சமமாக இழப்பீட்டை பெறும் தகுதியுடையவரே.
- தனியாக வாழும் பெண் அல்லது விதவைகளும் இழப்பீடு பெற தகுதியுடையவரே.

# வலுக்கட்டாயமான வெளியேற்றத்தினால் பாதிப்படைந்த மக்கள் நீதிகேட்க பயன்படுத்தக் கூடிய செயல்பாடுகள்

- வெளியேற்றத்தின் போது செய்ய வேண்டிய முதல் கட்ட பணியானது தகவல்கள் சேகரிப்பே. தங்கள் வீடுகளையும், உடமைகளையும் பாதுகாக்கும்போது தாங்கள் அல்லது தங்கள் சமூகத்திலுள்ள யாரையாவது அரசாங்கத்தின் அத்து மீரல்களை புகைபடங்கள் எடுக்க சொல்ல வேண்டும்.


வலுக்கட்டாயமான வெளியேற்றத்தை
கண்டித்து பெண்கள் உண்ணாவிரதம்

- உடனடியாக ஊடகங்களுக்கு தகவல் கொடுக்கவும். (சில முக்கிய தொலைபேசி எண்கள் இக்கையேட்டில் காணலாம்)
- தங்கள் இடத்திலுள்ள மக்கள் இயக்கங்களை ஒன்று திரட்டி செய்யவேண்டிய அவசரகால நடவடிக்கைகள் (தங்கள் இடங்களில் மக்கள் இயக்கங்கள் இல்லையென்றாலும் அல்லது அவர்கள் உதவிக்கு முன்வர மறுத்தாலும் உடனடியாக ஊர் தலைவர்கள், ஆண்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் கொண்ட ஒரு அவசர கால பணிகுழுவை அமைக்கவும்):

    - இடமாற்றத்தை குறித்த தகவல்களை சேகரித்து அதில் நடந்த மனித உரிமை மீறல்களைக்குறித்த தகவல்களை திரட்டவும், இக்கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மீறல்களையும் அதில் உள்ளடக்கவும். இதனை செய்ய தங்களுடன் பணிபுரியும் அல்லது அருகாமையிலுள்ள தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் உதவியை எடுத்துக்கொண்டு ஒரு தகவல் அறிக்கையை தயார் செய்ய வேண்டும்.
    - மக்கள் இயக்கம் அல்லது அங்குள்ள அவசர கால பணிக்குழு மக்களுக்காக பணிசெய்யும் சமூக ஆர்வலர்களை அழைக்கலாம். அவர்கள் உண்மை அறியும் (Fact-Finding) குழு அறிக்கை சமர்பிக்கலாம்.
    - மனித உரிமைக்காக போராடும் சட்ட ஆர்வலர்களை சந்தித்து லிபி மனு (Writ Petition) அல்லது பொது நல வழக்குகள் (Public Interest Litigation) பதிவுசெய்யலாம்.
    - தேவைப்படும் இதர தகவல்களுக்கு உடனடியாக தகவல் பெறும் உரிமை சட்டம் 2005-யை பயன்படுத்தலாம்.
    - தங்களுக்கு நடந்த அநீதியை கண்டித்து சம்மந்தப்பட்ட அரசு துறைக்கு கண்டன மனு அனுப்பலாம் அத்துடன் தங்கள் நிலையை முதலமைச்சர் மற்றும் ஆளுனர் அவர்களுக்கும் தெரியப்படுத்தலாம்.
    - தங்களுக்கு நடந்த மனித உரிமை மீறல்களை குறித்து மேல் குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் மனித உரிமை ஆணயங்கள், தேசிய அளவிலான அமைப்புகள் மற்றும் ஐ. நா. சிறப்பு கண்காணிப்பு அதிகாரிக்கும் எழுதலாம்.
    - கையெழுத்து பிரசாரம், போராட்டம், உண்ணா விரதம் போன்ற கவன ஈர்ப்பு செயல்பாடுகளில் ஈடுபடலாம்.

# வலுக்கட்டாயமான வெளியேற்றத்தை எதிர்கொள்ள பயன்படுத்த வேண்டிய யுக்திகள்

- வலுக்கட்டாயமான வெளியேற்றத்தை எதிர்கொள்ள செய்யும் முதல் செயல்பாடு தங்கள் உரிமைகளை தெரிந்து கொள்ளுவதுதான். தங்கள் உரிமையை தெரிந்து கொண்டால்தான் உரிமை மீறல்களை அடையாளம் காணலாம். இக்கையேட்டினை தங்கள் இடங்களில் பொது கூட்டமிட்டு எல்லா மக்களுக்கும் தெரியப்படுத்தவேண்டும்.

- தங்கள் இருப்பிடத்திலுள்ள ஊர் தலைவர்கள், மக்கள் இயக்கங்கள், பெண்கள் சங்கம் மற்றும் இளைஞர்கள் குழுக்களை கண்டறிந்து இக்கையேட்டினையும் அதிலுள்ள தகவல்களையும் பகிரவும். தங்களிடம் பணிபுரியும் தன்னார்வ தொண்டு நிறுவனத்திடம் இக்கையேட்டின் அடிப்படையில் பயிற்சிகள் நடத்த கேட்கலாம்.
- இடமாற்றத்தை கண்காணிக்கும் பணிக் குழு ஒன்றினை உருவாக்கலாம்ப. (இதில் பெண்கள் பங்கேற்பு இன்றியமையாதது)
- தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005-யை பயன்படுத்த கற்றுக்கொள்வது.
- மக்கள் உரிமைகளுக்காக பாடுபடும் நிறுவனங்களை கண்டறிவது, அவர்களிடம் வெளியேற்றத்தை தடுக்கும் வழிமுறைகளை அலோசிக்கலாம்.
- நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு தயார் நிலையில் சட்ட ஆர்வலரின் ஆலோசனையின் அடிப்படையில் தேவையான ஆவணங்களை சேகரிப்பது.
- அருகாமையிலுள்ள குடிசைபகுதிகள் மற்றும் இதர மக்களின் துணை மற்றும் ஆதரவை பெறுதல்.
- நகர வாழ் எளியவர்களுக்கான இயக்கங்களுடன் தொடர்பில் இருப்பது.

# வலுக்கட்டாயமான வெளியேற்றத்தின் போது தொடர்புகொள்ள வேண்டிய நிறுவனங்கள்

1. தொடர்புகொள்ள வேண்டிய அரசாங்க பிரதிநிதிகள்:

a. முதலமைச்சர் தனி பிரிவு
Chief Minister's Special Cell,
Secretariat, Chennai – 600 009.
Phone Number: (044) 25671764 | Fax Number: (044) 25676929 | E-Mail: cmcell@tn.gov.in

b. வீட்டு வசதி மற்றும் நகர வளர்ச்சித் துறை
The Principal Secretary,
Housing and Urban Development Department, Secretariat, Chennai – 600 009.
PBX No. (044) 25665566 | E-Mail: hud@tn.gov.in

c. நகராட்சி நிர்வாக ஆணையரகத்தின் (சென்னை தவிர இதர மாநகராட்ச்சிகளுக்கு)
The Commissioner,
Commissionerate of Municipal Adminstration, Ezhilagam, Chepauk, Chennai – 600 005.
Phone Number: (044) 28549921/60 Fax Number: (044) 28411364 | E-Mail: cma.tncma@nic.in

d. சென்னை மாநகராட்சி

The Commissioner,
Corporation of Chennai, Ripon Building, No. 1131, EVR Periyar Salai
Park Town, Chennai – 600 003.
PBX No: 25384510 | Email: Commissioner@chennaicorporation.gov.in

e. தமிழ்நாடு குடிசைபகுதி மாற்று வாரியம்,

Managing Director,
Tamil Nadu Slum Clearance Board, No. 5, Kamarajar Salai, Triplicane, Chennai – 600 005.
Email : tnscb@yahoo.com

2. மாநில மனித உரிமை ஆணையங்கள்

a. தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம்

Tamil Nadu Human Rights Commission,
Tiruvaragam,
143, P. S. Kumara Samy Raja Salai (Greenways Road), Chennai – 600 028, Tamil Nadu.
Phone: (044) 24951486

b. தமிழ்நாடு மாநில குழந்தைகள் உரிமை ஆணையம்

Tamil Nadu State Commission for the Protection of Child Rights
Mr. Sravan Kumar, Incharge.
Mobile Number: 9444961000 | E-mail: scpcrtn@gmail.com

c. தமிழ்நாடு மாநில பெண்கள் உரிமை ஆணையம்

Tamil Nadu State Commission for Women
Ground Floor, Agriculture Office Building, Chepauk, Chennai – 600005.
Phone : (044) 28592750.

3. தேசிய மனித உரிமை ஆணையங்கள்

a. தேசிய மனித உரிமை ஆணையம்

National Human Rights Commission,
Faridkot House, Copernicus Marg, New Delhi -110001.
Phone: (011) 2338-2509/ 9810298900 | Email: jrlawnhrc@nic.in

b. தேசிய மகளிர் ஆணையம்

National Commission for Women,
4, Deen Dayal Upadhyaya Marg, New Delhi – 110002.
Phone: (011) 2323-7166 | Email: ncw@nic.in

c. தேசிய குழந்தை உரிமைக்கான ஆணையம்
National Commission for the Protection of Child Rights,
5th Floor, Chanderlok Building, 36 Janpath, New Delhi – 110001.
Ph: (011) 2347-8200 | Email: ncpcr.india@gmail.com

4. தேசிய மனித உரிமை நிறுவனங்கள்

a. மனித உரிமை மற்றும் சட்ட உரிமைக்கான கூட்டமைப்பு
Human Rights Law Network
576, Masjid Road, Jungpura, New Delhi - 110014.
Phone: (011) 2437-4501/ 2437-9855 | Email: contact@hrln.org

b. உறைவிடம் மற்றும் நிலவுரிமைக்கான கூட்டுப்பணி
Housing and Land Rights Network
G-18/1, Nizamuddin West, Lower Ground Floor , New Delhi - 110013.
Phone/Fax: (011) 2435-8492 | E-mail: info@hic-sarp.org

c. இந்தோ-குளோபல் சமூக சேவை நிறுவனம்
Indo-Global Social Service Society
28, Institutional Area, Lodhi Road, New Delhi – 110003.
Phone: (011) 4570-5000 | Email: doc@igsss.net

d. தலித் மனித உரிமைக்கான தேசிய பிரச்சாரம்
National Campaign on Dalit Human Rights,
8/1, South Patel Nagar, Second Floor, New Delhi - 110008.
Phone: (011) 4566-8341/ 4503-7897

5. தமிழகத்திலுள்ள மனித உரிமை நிறுவனங்கள்

a. நகரத்தில் புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்திற்கான வளங்கள்
மற்றும் தகவல் சேகரிப்பு மையம்,
Information and Resource Centre for the Deprived Urban Communities,(IRCDUC),
175/12, Chennai Flats, Padi Kuppam Road, Chennai – 600 040.
Phone Number: (044) 26150769

6. ஊடகங்கள்

a. இந்தியன் எக்ஸ்பிரஸ்
The New Indian Express,
Phone Number: (044) 23457601, 23457602, 23457603, 23457604, 23457605, 23457606 23457607

b. இந்து நாளிதழ்
The Hindu,
Phone Number: (044) 28576300

c. டைம்ஸ் ஆப் இந்தியா
The Times of India,
Phone Number: (044) 40401400, 40401234, 24342121, 24301307, 24338008.

d.தினமலர்
Dhinamalar,
Phone Number: (044) 28540001, 28540002, 28540003, 28540004, 28540005, 28540006, 28540007, 28540008, 28540009

e. தினத்தந்தி
Dhinathanthi
Phone Number: (044) 26618661

f. தினகரன்
Dhinakaran
Phone Number: (044) 42209191 (EXTN. 2314, 2315)

Information and Resource Centre for the Deprived Urban Communities

Housing and Land Rights Network

## கையேட்டினை வெளியிடும் நிறுவனங்கள்


உறைவிடம் மற்றும் நிலவுரிமைக்கான கூட்டுப்பணி

**Housing and Land Rights Network (HLRN)**

G-18/1, Nizamuddin West, Lower Ground Floor, New Delhi - 110013.

Phone/Fax: (011) 2435-8492 | E-mail: info@hic-sarp.org

நகரத்தில் புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்திற்கான வளங்கள் மற்றும் தகவல் சேகரிப்பு மையம்

**Information and Resource Centre for the Deprived Urban Communities,(IRCDUC)**

175/12, Chennai Flats, Padi Kuppam Road, Chennai – 600 040.

Phone Number: (044) 26150769